வரையிலும் இருக்கும். அதைத் தொடர்ந்து அவர் பேசிய அனைத்தும், இடையிடையே திரு. ஞானசேகரன் முதலானவர்கள் குறுக்கீடு செய்தது எல்லாம் அவைக் குறிப்பிலே இருந்து நீக்கப்படுகிறது. பேரவைத் துணைத் தலைவர் அவர்கள், நான் சொன்னதைப்போல குறிப்பிட்ட அந்தப் பகுதி வரையிலும் நீக்கப்படுகிறது. அதன் பின்னர் திரு.செது.வரதராஜன், 'மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலைமையில் மாநில அளவில் திருக்கோயில் நிர்வாக வாரியமும், மாவட்ட அளவில் திருக்கோயில் நிர்வாக மாவட்டக் குழுவும் இந்த அரசு ஏற்படுத்தியது பாராட்டுக்குரியது' என்று பேசியதிலிருந்து இருக்கிற பகுதி அவைக் குறிப்பிலே இருக்கும். அதுபோல, செங்கல்பட்டு, கோயில்பட்டி பற்றி பேசியது அவைக் குறிப்பிலே இருக்கும். இடையிலே இருக்கிற அனைத்தும் அவைக் குறிப்பிலே இருந்து நீக்கப்படுகிறது.

பிற்பகல் *7-55*

பஞ்சாமிர்தம் கொடுத்ததோடு, இனிப்பான செய்திகளைச் சொன்ன மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு பாராட்டும், நன்றியும்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (28-4-1994) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் *7-55* மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

107. நுழைவு வரியிலிருந்து விலக்கு அளிப்பது குறித்து, வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் *25-1-1994*-ஆம் நாளிட்ட *26*–ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [*1990*–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி பகுதிக்குள் இயக்கூர்திகளின் நுழைவின் மீதான வரிச்சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *13/1990*) *18(4)* பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[*1994 ஏப்ரல் 27*

108. தமிழ்நாடு கரும்புப் பண்ணைக் கழகத்தின் 1990-91-ஆம் ஆண்டிற்கான பதினேழாவது ஆண்டறிக்கை. [*1956—ஆம்* ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619/ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்).

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

126. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் *1992-93*-ஆம் ஆண்டிற்கான தணிக்கை அறிக்கை – ஆண்டுக் கணக்கு. (தமிழ், ஆங்கிலம்)

127. மானியக் கோரிக்கை எண் 4–தமிழ்நாடு பொது விற்பனை வரிகள் ஏனைய வரிகள் தீர்வைகள்–நிருவாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, *1994-95.* (தமிழ், ஆங்கிலம்).

128. மானியக் கோரிக்கை எண் *12*–தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1994-95. (தமிழ், ஆங்கிலம்).

129. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று அறுபத்து மூன்றாவது அறிக்கை, 1993-94.

130. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று அறுபத்து நான்காவது அறிக்கை, 1993-94.

131. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று அறுபத்து ஐந்தாவது அறிக்கை, 1993-94.

132. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று அறுபத்தி ஆறாவது அறிக்கை, 1993-94.

133. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று அறுபத்து ஏழாவது அறிக்கை, 1993-94.

134. சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் ஒன்பதாவது அறிக்கை, 1993-94.

135. அரசு உறுதிமொழிக் குழுவின் பன்னிரெண்டாவது அறிக்கை, 1993-94.